## இலங்கை பத்திரிகை பேரவை - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பத்திரிகை பேரவையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பத்திரிகை பேரவையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிறகு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விசாலம் (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இற்கு இணங்க சொத்தொன்றின் பயன்தரு ஆயுட் காலம் மற்றும் இழிவுப் பெறுமதி என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் மீள்மதிப்பீடு செய்தல் | பேரவையில் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியொன்ற இருப்பதாலும் கடந்த ஆண்டின் இறுதி மாதத்தில் கணக்காளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மையால் | சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி பயன்தரு ஆயட்காலம் மற்றும் என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் மீள்மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | அவசியமான போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளாத காரணத்தினால் ரூபா 3,010,448 கிரயமான முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. எவ்வாறாயினும் இ.பொ.து. கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அதன் மதிப்பீட்டு வழு திருத்தம் செய்யப்பட்டு அச்சொத்துக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்பாட்டை மேற்கொள்ள முடியாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்புக்கள் கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதி அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 639,061 ஆன விற்பனைக்காக புத்தகங்களில் தேறிய தீர்வையாகும் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமல் அதன் கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதி அறிக்கையிடப்பட வேண்டும் |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலவசமாக பகிர்ந்தளிக்கப்படும் ரூபா 333,107 கிரயமான 843 புத்தகங்கள் நன்கொடையாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக தொடர்பாடல் செயலமர்வு செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தி யோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | இலவசமாக பகிர்ந்தளிக்கப்படுவதால் நன்கொடையாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமாத்தேய்வு ரூபா 104,895 குறைத்து கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான மிகை அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தி யோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | காலப்பகுதிக்கான பெறுமானத்தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிலுவை பத்திரிகை பதிவுக் கட்டணங்களான ரூபா 105,000 ஐ பெற வேண்டிய வருமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தி யோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டம் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை வீதம் 04 கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் 02 கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டின் முதல் மற்றும் மூன்றாம் காலாண்டில் கணக்காளர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்படாமல் இருந்தமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டங்களை நடாத்த முடியாமல் இருந்த போதும் அதன் பின்னர் இரண்டு காலாண்டுகளில் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை வீதம் ஆண்டொன்றில் 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 நவம்பர் 30 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ4/37/4/ 238/2 ஆம் | சபையின் பதவியணியினருக்கான விடுமுறை தினப் படிகள் மற்றும் வேலைசெய்யும் | சில சந்தர்ப்பங்களில் கஷ்டப் பிரதேசங்களில் இவ்வாறான | காணப்படும் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு படிகள் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | நாட்களில் கடமை நேரத்திற்கு பின்னர் செலவிடும் நாளொன்றுக்காக பெற்றுக் கொள்ளக்கூடிய படிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது அப்படிகளுக்கு மேலதிகமாக 5 நிகழ்ச்சிகளுக்காக உணவு தங்குமிடத்திற்காக மூன்று பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களுக்கு ரூபா 77,927 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதால் உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் நடைமுறை சிக்கல் காரணமாக நாளொன்றுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள படிகள் தற்போது போதியதாக இல்லாமையால் இது தொடர்பான வேண்டுகோளொன்று தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

(அ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,487,617 தொகையான மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 740,009 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 747,608 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட அரச கொடைகள் ரூபா 1,504,199 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 879,708 இனால் அதிகரித்தமை பிரதான காரணங்களாகும்.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது 2015 ஆம் ஆண்டில் நிதி விளைவுகளில் பற்றாக்குறையுடன் 2016 முதல் 2019 வரை மிகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுகான பெறுமானத்தேய்வு என்பன சாட்டுதல் செய்யப்பட்ட பின்னர் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 14,974,854 ஆன பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 18,210,648 வரை 22 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு ஆராய்ச்சி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக | இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டத்திலும் பணிப்பாளர் சபைக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டதுடன் மிக விரைவில் | குறித்த அறிக்கையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 200,000 தொகை முற்பணமாக 2015 நவம்பர் 24 இல் களணி பல்கலைக் கழகத்தின் வெகுஜன ஊடகத்துறைப் பிரிவிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் பேரவைக்கு பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 மே 30 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையை வழங்குமாறு பலசந்தர்ப்பங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | வெகுசன விடயம் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் மற்றும் மீளாய்வாண்டிலும் அச்சிடப்பட்ட புத்தக இருப்பொன்று ஆண்டின் இறுதி வரையில் ரூபா 639,061 கிரயமான 2303 புத்தகங்கள் எஞ்சியிருந்தன. அப்புத்தகங்கள் விற்பன செய்யப்படாமையால் அதிகளவில் இலவசமாக பகிந்ர்தளிப்பதற்காக பேரவையின் தீர்மானத்தின் பிரகாரம் 843 புத்தகங்கள் 2019 ஆம் ஆண்டில் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. | அப்புத்தக இருப்பில் தற்போது எஞ்சியுள்ள புத்தகங்களின் அளவு பழையதாக இருப்பதால் விற்பனை செய்தல் சிரமமாக உள்ளது. அமைச்சின் ஆலோசணையின் பிரகாரம் செயலமர்வுகளில் இலவசமாக வழங்கிய போதும் வேறு கொள்கை விடயமொன்று காரணத்தின் பேரில் அதனை முன்கொண்டு செல்ல டியாமல் இருந்தது. | புத்தகங்களை அச்சிடும் போது தேவைப்பாட்டை கருத்திற்கொண்டு அச்சிடப்பட வேண்டும். |
| (இ) | 2010 மே 14 ஆம் திகதிய ஜனாதிபதி செயலக கடித இலக்கம் சீஏ/1/17/1 இன் 1 ஆம் பந்தி மற்றும் 2012 ஜுலை 10 இன் பொது முயற்சிகள் குழுவின் 7 ஆவது கட்டளை என்பவற்றின் பிரகாரம் பேரவை தனது செயற்பாட்டை அரச கட்டிடத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும். எனினும் பேரவையின் ஆரம்பம் முதல் 20 வருடங்களாக வாடகைக்கு பெற்றுக்கொண்ட கட்டிடங்களில் தனது செயற்பாட்டை மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் அதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2019 வரை மாத்திரம் ரூபா 22,448,800 செலவிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் வரிசை அமைச்சின் மூலம் மற்றும் சபையின் நேரடி ஈடுபாட்டின் பேரில் தேவையான நடவடிக்கை எடுத்த போதும் அதற்காக பொறுப்பேற்றல் கிடைக்கவில்லை. அதன் பிரகாரம் அரசின் கட்டிடமொன்று இருப்பது என்பது தொடர்பாக பரீட்சிக்கப்பட்ட போதும் கட்டிடமொன்றை தேடிக் கொள்வதில் ஒரு சவாலாக வந்துள்ளது. | அரசு நிறுவனங்களுடன் மேலதிக கலந்துரையாடல்கள் மேற்கொண்டு பொருத்தமான வளவொன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1981 ஒக்டோபர் 14 இல் 162/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி குறிப்பின்படி, தினசரி பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் தொடர்பிலான பத்திரிகையாளர்களை நெறிமுறைக் கோவையுடன் இணங்கியொழுகுவதனை புலனாய்வு செய்வதற்கான முறைமையொன்று காணப்படுகின்றது. எனினும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான புலனாய்வு அறிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அப்புலனாய்வு அறிக்கைகள் தொடர்பாகவும் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுதல் தொடர்பாக தேவையான மதிப்பீடுகள் மேற்கொள்வது தொடர்பாக பணிப்பாளர் சபை போதியளவு கவனத்தினை செலுத்தியிருக்கவில்லை. | இதுவரை குறித்த பத்திரிகை தொடர்பாக மாதாந்த அறிக்கை உயர் நிர்வாகத்திற்கு சமர்ப்பிக்குமாறும் பத்திரிகை சட்டத்தை மீறுவது தொடர்பாகவும் ஒழுக்க நெறிகளை மீறுதல் தொடர்பான அவதானிப்புக்கள் செய்தி ஆசிரியர்களுக்கு அறவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புலனாய்வு அறிக்கை மற்றும் நெறிமுறைக் கோவையை பின்பற்றுதல் தொடர்பாக தேவைப்படுத்தப்பட்டுள்ள மதிப்பீடுகனை நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை பொருண்மையான கவனத்தினை செலுத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பத்திரிகை பேரவை சட்டத்தின் 25 ஆம் பிரிவின் படி சகல பத்திரிகைகளும் பத்திரிகை பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்கு சட்டத்தின் 30 ஆவது பிரிவின்படி பேரவைக்கு அதிகாரம் காணப்பட்ட போதிலும், இது தொடர்பான விதிகளை பேரவை தயாரித்திருக்கவில்லை. பதிவு செய்யப்படவேண்டிய பத்திரிகைகளின் எண்ணிக்கை 250 ஆக பேரவை மதிப்பீடு செய்திருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் பதிவுச் செய்யப்பட்ட பத்திரிகைகளின் | மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விட குறைவான பெறுமதியொன்று பதிவுசெய்வது தொடர்பாக இணங்குகின்றேன். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் பத்திரிகை விற்பனை நிலையங்களுக்கு சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களை அனுப்பி தேவையான பதிவினை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது. அவ்வாறே பத்திரிகை பேரவை கட்டளைகளின் (பொதுவான) பதிவு இல்லாவிட்டால் | பதிவு செய்யப்படாமல் சந்தையில் புழக்கத்தில் விடப்பட்ட செய்தித்தாள் களுக்கு எதிராக பேரவையால் விசாரணை நடத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை முறையே 180 ஆக காணப்பட்டது. எனினும், பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பான புலனாய்வு பேரவையினால் செய்யப்பட்டிருக்கவில்லை. | எடுக்கக்கூடிய நடைமுறைகள் விரிவாக குறிப்பிடப்படாததால் அதற்குரிய விதிகளைத் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டில் செய்திப் பத்திரிகைகளுக்கு எதிராக பொது மக்களிடமிருந்தும் வெவ்வேறு நிறுவனங் களிடமிருந்தும் 79 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்படாத 38 முறைப்பாடுகளுடன் தீர்வு செய்வதற்குள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 117 ஆகும். அதில் 60 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்படாமல் இருந்ததுடன் அவ்வாறு தீர்வுசெய்யப்படாத 60 முறைப்பாடுகளில் 21 முறைப்பாடுகள் 01 ஆண்டிற்கும் 06 ஆண்டுகள் வரை தீர்வு செய்வதற்கு தாமதமடைந்திருந்தது. மீளாய்வாண்டில் 02 முறைப்பாடுகளுக்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் இணக்கப்பாட்டிற்கு வந்த முறைப்பாடுகள் 32 ஆக இருந்தன. | முறைப்பாடொன்று கிடைத்து ஒரு வாரத்திற்குள் பரிசோதனை தொடங்கப்படுகின்றது. மேலும் இரண்டு வாரங்களில் பிரமாணங்களின் பிரகாரம் பரிசோதனை ஆரம்பிக்கப்பட உள்ளது. | பத்திரிகை முறைப்பாடுகளுக்காக தர்வு வழங்கும் செயற்பாட்டை துரிதப்படுத்த வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேரவையினால் முறையே 1993 நவம்பர் 05 ஆந் திகதி மற்றும் 2009 செப்தம்பர் 07 ஆந் திகதிகளில் முறையே ஆய்வு நிதியம் மற்றும் கடன் நிதியம் என பெயரிடப்பட்டு திறக்கப்பட்ட இரண்டு வங்கி கணக்குகள் பேரவையால் பராமரிக்கப்பட்டு வருவதுடன் மளாய்வாண்டின் இறுதி வரை அக்கணக்குகளில் மீதி முறையே ரூபா 3,696,320 தொகையும் ரூபா 1,974,390 ஆக | நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளருடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதுடன் அதன்போது மேலும் ஆராய்ச்சி நிதி மற்றும் கடன் நிதி ஆகிய இரண்டு கணக்குகளுக்கும் அனுமதி வழங்குவதற்கான வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. | குறித்த நிதியக் கணக்குகளை பேணிச்செல்வதற்காக அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

இருந்தது. எப்ஜஎன்/168/பீஎன்/ மற்றும் 2017 திசெம்பர் 19 ஆந் திகதிய பேரவையின் தலைவரின் கடிதத்தின் மூலம் இந்நிதியக் கணக்குகளை பராமரிப்பதற்கு பொதுப் பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினது அனுமதிக்காக கோரப்பட்டிருந்த போதிலும், அவ் அனுமதி 2020 யூன் 09 ஆந் திகதி வரையிலும் அந்த அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்டிருந்த உவி பத்திரிகை ஆணையாளர் பதவி 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டது. | துரிதமாக புதிய உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புதிய உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு சபை தவறியிருந்ததுடன் 50 தொடர்பாடல் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா 200,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் 20 கலந்துரையாடல் மாத்திரம் நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 20,000 செலவிடப்பட்டிருந்தது. | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றதுடன் ஏப்ரல், மே, யூன் மாதங்களில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் நாட்டில் காணப்பட்ட பாதுகாப்பு நிலைமை காரணமாக மேற்கொள்ள முடியவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இன் பிரகாரம், பேரவையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பதவியொன்றை அங்கீகரிக்குமாறு வேண்டுகோளொன்று அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வினை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 38 சதவீதம் முதல் 117 சதவீதம் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 16 சதவீதம் முதல் 61 சதவீதம் வரை குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. | பாதீட்டின் பிரகாரம் அநேகமாக நடவடிக்கைகளை செய்வதற்கு யற்சி எடுத்துள்ளதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் இவ்வாறான விலகல்களை குறைப்பதற்கு பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்தது. | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |